**ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை – 06.**

**பத்திரிகைச் செய்தி**

பட்டதாரி ஆசிரியர் / வட்டார வள மைய ஆசிரியர் பணியிடத்திற்கான 2023 - 2024 ஆம் ஆண்டிற்கான ஆசிரியர் தேர்வு வாரியத்தின் அறிவிக்கை எண்.03/2023, நாள்.25.10.2023-ன்படி 04.02.2024 அன்று ஒளியியல் குறி அங்கீகாரம் (Optical Mark Recognition (OMR) மூலம் தேர்வு நடத்தப்பட்டது. தற்போது மேற்காணும் போட்டித் தேர்வுக்கான கேள்விகளுக்கு உரிய தற்காலிக உத்தேச விடைக்குறிப்புகள் (Tentative Key Answers) வினாத்தாள் 'A' வகைக்குரியது ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளமான www.trb.tn.gov.in-ல் வெளியிடப்பட்டுள்ளன.

ஆசிரியர் தேர்வு வாரியம் வெளியிட்டுள்ள தற்காலிக உத்தேச விடைக்குறிப்பின் மீது ஆட்சேபனை தெரிவிக்க விரும்பும் தேர்வர்கள் **19.02.2024 முதல் 25.02.2024 பிற்பகல் 05.30 மணி வரை** ஆசிரியர் தேர்வு வாரிய இணையதள முகவரியில் மட்டுமே ஆதாரங்களுடன் பதிவு செய்திடல் வேண்டும். தபால் அல்லது பிறவழி முறையீடுகள் ஏற்கப்படமாட்டாது. அவை நிராகரிக்கப்பட்டதாகக் கருதப்படும். அங்கீகரிக்கப்பட்ட பாடப்புத்தகங்கள் (Standard Text Books) ஆதாரம் மட்டுமே அளிக்க வேண்டும். கையேடுகள்(Guides, Notes) ஆதாரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

தேர்வர்கள் வினாத்தாள் (**"A" series question paper**) TRB website-ல் வெளியிடப்பட்டுள்ளதற்குரிய தற்காலிக விடைக்குறிப்பிற்கு இணையவழியில் ஆட்சேபணை (objection) தெரிவிக்கும்போது உரிய வழிமுறைகளைத் தவறாமல் பின்பற்றி அதற்குரிய சான்றாவணங்களை இணைக்க வேண்டும், சான்றாவணங்கள் இணைக்கப்படாத முறையீடுகள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இவையனைத்தும் முற்றிலுமாக நிராகரிக்கப்படும்.

மாற்றுத்திறன் படைத்த தேர்வர்கள் (PWD candidates) பகுதி-B-ல் வினா எண் 31 முதல் 180 வரை உள்ள வினாக்களுக்கு மட்டுமே ஆட்சேபனை தெரிவிக்கலாம். பகுதி-A-ல் உள்ள 01 முதல் 30 வரையிலான கட்டாயத் தமிழ்மொழி பகுதியின் வினாக்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் மாற்றுத்திறன் படைத்த தேர்வர்கள் (PWD candidates) தெரிவிக்கக்கூடாது. மேலும், பாடவல்லுநர்களின் முடிவே இறுதியானது என்று அறிவிக்கப்படுகின்றது.

நாள்:19.02.2024 தலைவர்.